பாதித்தொகையை வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழும் பாதித் தொகையை நில உபயோகிப்பாளர்களும் கொடுக்க வேண்டுமென்ற முறையில் அமுல் நடத்தப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் இதற்கு முன்னாலே, முதலிலே அரசு அந்தச் செலவைச் செய்து விட்டு, பாதித் தொகையை விவசாயிகளிடமிருந்து நில வரியோடு வசூல் செய்து வந்தது. இப்பொழுது பாதித் தொகையை விவசாயிகள் கொடுத்தால்தான் மீதி பாதித் தொகையை அரசு கொடுக்கும் என்ற நிலையிருப்பதால் அந்த வேலைகள் பாதிக்கப்படுவதாலே, முன்னாலே இருந்ததைப் போல், அரசே முழுவதையும் செலவு செய்து விட்டு அந்தப் பாதித் தொகையைக் குடிமராமத்து செய்துவிட்டு நில வரியோடு சேர்த்து வசூல் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? அதே போல், காவிரியின் பிரதான வடிகால் பகுதியாக இருக்கக் கூடிய கிருதுமால் ஆறு சீமைக்காட்டாமணியால் பெரும் அளவுக்குச் சீர் கெட்டிருக்கிறது. அதைச் சீர்படுத்துவதற்கான முயற்சியையும் அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இவ்வாண்டு நிதி ஒதுக்கம் செய்கிற பொழுது மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனை கருத்திலே கொள்ளப்படும். சீமைக் காட்டாமணியை அகற்றுவதற்கு, செப்பனிடுகின்ற பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலப்பாளையத்தில் பீடி சுற்றும் பெண் தொழிலாளர்களின் நலத் திட்டங்கள்.

84—(*வினா எண் 9174) திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலப்பாளையத்தில் பல ஆயிரம் பீடி சுற்றும் பெண் தொழிலாளர்கள் பணி செய்து வருவதால் அவர்களுடைய நலத்திட்டங்களுக்கு தனிப் பணியாளரை நியமிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நியமனம் செய்யப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கிடமில்லை.

திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்விக்கு அமைச்சர் அவர்கள் இல்லையென்று பதில் கூறினார்கள். அதற்கு நன்றி. இருந்தாலும் இப்படிப்பட்ட ஒரு நல்ல அமைப்பினை அப்பகுதியிலாவது ஆயிரக்கணக்கான பெண் தொழிலாளர்களுக்காக ஏற்படுத்தித் தரவேண்டும். அப்படி ஏற்படுத்தித் தந்து நன்றி சொல்ல எனக்கு ஒரு வாய்ப்பை அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1987 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 1966 ஆம் வருட பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர் (வேலை நிலைமைகள்) சட்டத்தின் கீழ் ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள 206 உதவி ஆய்வாளர்கள், 30 துணை ஆய்வாளர்கள், 17 துணை ஆய்வாளர்கள் (குறைந்தபட்சக் கூலி), மற்றும் 19 தொழிலாளர் துறை ஆய்வாளர்கள், ஆண் அல்லது பெண் என்ற பாகுபாடு ஏதும் இல்லாமல் பீடிசுற்றும் தொழிலாளர்களின் நலத் திட்டங்களை அமுல் செய்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி பெண்களுக்கு மட்டும் போடப்படுமா என்பது. இதிலே பாகுபாடு வேண்டாம் என்கின்ற வகையிலேதான் அந்தப் பதில் இல்லையென்று வந்திருக்கிறது. ஆகவே இப்பொழுதே நன்றி சொல்லலாம்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக மேலப்பாளையத்தில் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் மிகப் பெரும்பாலோர் பெண்களாக இருக்கிற காரணத்தால், ஒரு பெண் ஆய்வாளரை நியமிப்பது பற்றி அரசு ஆராயுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆய்வாளர்கள் என்று பொதுவாக இருக்கிறது. ஆய்வாளர்களிலே பெண்கள் இருக்கிறார்களா என்ற விவரம் என்னிடத்திலே இல்லை.

தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை மணல்மேட்டில்
ஈ. எஸ். ஐ. மருத்துவமனை அமைத்தல்.

85—(*வினா எண் 10838) **திரு. மு. தங்கமணி** : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை, மணல்மேடு கூட்டுறவு நூற்பாலை தொழிலாளர்களுக்கு ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை அமைத்திடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் மயிலாடுதுறையில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துமனை (E. S. I. Hospital) ஏற்படுத்த கருத்துரு ஏதும் இல்லை. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் (E. S. I. Dispensary) ஏற்படுத்துவதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மு. தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயற் குறிப்பு இருப்பதாகச் சொன்னார்கள். மயிலாடுதுறை கூட்டுறவு நூற்பாலையில் 800-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். அதற்கு மேலாக கூட்டுறவுச் சர்க்கரை ஆலை என்னுடைய தொகுதியில் தொடங்கப்பட்டிருக்கிறது. அதில்